தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாகுறிச்சி,
காளையார்கோயில் வட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டம்.

**பலவகை குத்தகை உரிமங்கள் – பசலி 1432 க்கான**
**(06.08.2022 முதல் 30.06.2023 முடிய)**
**டெண்டர் உள்ளிட்ட பொது ஏல அறிவிப்பு (முதல் அழைப்பு)**

1. இத்திருக்கோயிலுச்குச் சொந்தமான கீழ்காணும் பலவகைக் குத்தகை உரிமங்களின், பசலி **1432**க்கான **(06.08.2022** முதல் **30.06.2023** முடிய) டெண்டர் உள்ளிட்ட பொது ஏலம் **16.06.2022** அன்று முற்பகல் **11.30** மணி அளவில் சிவகங்கை, இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையர் அவர்கள் முன்னிலையில், இத்திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து ஆலய செயல் அலுவலரால் நடத்தப்பட உள்ளது.

**குத்தகை உரிமங்களின் விபரம்**

| வ.எண் | இனம் | முன் வைப்புத் தொகை | காலம் |
|---|---|---|---|
| 1 | தேங்காய் பழக்கடை வைத்துக் கொள்ளும் உரிமம் | 4,00,000/– | **பசலி 1432 (06.08.2022 முதல் 30.06.2023 (முடிய)** |
| 2 | பூக்கடை வைத்துக் கொள்ளும் உரிமம் | 2,00,000/– | |
| 3 | பிரசாத ஸ்டால் வைத்துக் கொள்ளும் உரிமம் | 3,00,000/– | |
| 4 | தேநீர், கடை வைத்துக் கொள்ளும் உரிமம் | 2,00,000/– | |
| 5 | இளநீர், குளிர்பானம் மற்றும் பெட்டிக்கடை வைத்துக் கொள்ளும் உரிமம் | 2,00,000/– | |
| 6 | காணிக்கை கோழி, சேவல், வாத்து சேகர உரிமம் | 2,00,000/– | |
| 7 | காணிக்கை ஆடு சேகர உரிமம் | 2,00,000/– | |
| 8 | வாகனக் கட்டணம் வசூல் உரிமம் | 3,00,000/– | |

கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி டெண்டர் உள்ளிட்ட பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாமென அறிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

2. டெண்டர் உள்ளிட்ட பொது ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் கலந்து கொள்ளும் இனத்திற்குரிய முன்வைப்புத் தொகைக்கு ''**செயல் அலுவலர் அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாகுறிச்சி**'' என்ற பெயரில் **01.06.2022** ஆம் தேதி மற்றும் இதன் பின் தேதியிட்ட வங்கி வரைவோலை (ஒரே வரைவோலை) எடுத்து **16.06.2022** அன்று காலை **10.00** மணிக்குள் ஆலய செயல் அலுவலரிடம் கொடுத்து ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ளும் நபர்கள் மட்டும் ஏலம் நடத்தும் இடத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.

பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் மேற்படி ஒப்புதல் சீட்டுடன் ஏலத்தின் போது ஆஜராக வேண்டும். ஏலத்தில் கலந்து கொள்வதுடன் டெண்டர் கொடுக்க விரும்பும் நபர்கள் ரூ 500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) செலுத்தி திருக்கோயில் அலுவலகத்தில் 01.06.2022 முதல் 04.06.2022, 06.06.2022 முதல் 11.06.2022 மற்றும் 13.06.2022, 14.06.2022, 15.06.2022 ஆகிய வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை டெண்டர் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

3. டெண்டர் படிவத்தினை நிரப்பி, முன் வைப்புத் தொகை செலுத்தியதற்கான ஒப்புதல் சீட்டினை டெண்டர் படிவத்துடன் இணைத்து ஒரு உறையில் வைத்து மூடி முத்திரையிட்டு 16.06.2022 அன்று முற்பகல் 10.30 மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்துள்ள டெண்டர் பெட்டியில் போட்டு விட வேண்டும். உறையின் மீது எந்த இனத்திற்கானது என்ற விபரம் குறிப்பிட வேண்டும். மேற்படி காலக் கெடுவிற்குப் பின்னர் வரப்பெறும் டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
4. டெண்டர் முன் வைப்புத் தொகை வங்கி வரைவோலையாக மட்டுமே பெறப்படும் ரொக்கமாகப் பெறப்படமாட்டாது.
5. ஒன்றிற்கும் மேற்பட்ட இனங்களில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே முன் வைப்புத் தொகை செலுத்தி டெண்டர் உள்ளிட்ட பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.
6. 16.06.2022 அன்று முற்பகல் 11.30 மணி அளவில் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து சிவகங்கை, இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையர் அவர்கள் முன்னிலையில் டெண்டர் உள்ளிட்ட பொது ஏலம் நடத்தப்படும். ஆஜராகும் ஏலதாரர்கள் மற்றும் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் முதலில் பொது ஏலம் நடத்தப்படும். ஏலத்தில் உயர்ந்த கேள்வி அறிந்ததும் அதற்கு மேல் கேள்வி ஏதும் இல்லை என ஊர்ஜிதம் செய்த பின்னர் ஏல நடவடிக்கையை நிறுத்தி வைத்து ஒவ்வொரு இனத்திற்கும் வரப்பெற்றுள்ள டெண்டர்கள் திறக்கப்படும்.
7. டெண்டர் உள்ளிட்ட பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்பவருக்கு இலாகா அங்கீகாரத்திற்குட்பட்டு மேற்படி இனம் முடிவு செய்யப்படும். தவறின் இதனால் ஏற்படக்கூடிய அனைத்து இழப்புகளையும் தவறிய உயர்ந்த கேள்வி கேட்வரே இத்திருக்கோயிலுக்கு செலுத்த வேண்டும்.
8. உயர்ந்த தொகைக்கு கேள்வி கேட்டு முடிவு செய்யப்பட்ட நபர் மேற்படி உயர்ந்த கேள்வித் தொகையினை உடன் செலுத்த வேண்டும்.
9. உரிமம் முடிவு செய்யப்பட்ட நபர் தமது சொந்தச் செலவில் குத்தகை உரிமம் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

10. எந்த ஒரு இனத்தையும் ஏலம்/ டெண்டர் எடுத்தவர் அந்த இனத்திற்குரிய தொகை முழுவதையும் சேர்த்து ஏலம்/டெண்டர் முடிந்தவுடன் அப்போது அவ்விடத்திலேயே கோயில் செயல் அலுவலரிடம் ரொக்கமாக செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு செலுத்துவதற்கு கால அவகாசம் ஏதும் அளிக்கப்படமாட்டாது. இவ்வாறு முழுத் தொகையும் செலுத்தத் தவறினால் கோயில் நிர்வாகிகளால் நடத்தப்படும் ஏலம்/டெண்டர் தானாகவே ரத்தாகிறது என்பதையும், இதற்கு வேறு அறிவிப்போ அல்லது உத்தரவோ தனியாக கொடுக்கப்பட மாட்டாது என்பதையும் அறியவும். இதன் பின்னர் சம்மந்தப்பட்ட இனம் மறு ஏலம் / டெண்டர் மூலமாகவோ அல்லது ஏலம்/ டெண்டர் இல்லாமல் தனிப்பட்ட முறையிலோ விடப்பட்டால் முன் ஏலம் /டெண்டர்தாரர் தனது முன்வைப்புத் தொகையினை இழந்தவராகிறார். மறு ஏலம்/ டெண்டர் அதனால் திருக்கோயிலுக்கு ஏதும் வருமான இழப்பு ஏற்பட்டால் இழப்பிற்கு காரணம் முன் ஏலம்/டெண்டர்தாரரே என கருத்திற்கொண்டு முன் ஏலதாரரிடமிருடந்து மேற்படி இழப்புத் தொகையும் வசூல் செய்ய சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியவும். மறு ஏலத்தில் திருக்கோயிலுக்கு லாபம் ஏற்பட்டால் அதில் பங்கு கோர முன் ஏலதாரர்/டெண்டர்தாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.
11. உரிமக் குத்தகைகளை இந்து சமயத்தினர் மட்டுமே ஏலம்/டெண்டர் மூலம் எடுக்க அனுமதிக்கப்படுவார்கள்.
12. திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவர்கள் மற்றும் நடத்துபவர்கள் அவர்களின் உறவினர்கள் கோயிலின் நன்மைக்கு புறம்பாக செயல்பட்டவர்கள் அல்லது மேலே கண்ட வகையினருக்காக பினாமியாக கேட்பவரென திருக்கோயில் நிர்வாகிகளால் கருதப்படுவார்கள் மற்றும் 21 வயது முடியப் பெறாதவர்கள் ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பினாமி பெயரில் ஏலம் எடுத்து பிற நபர்கள், திருக்கோயில் பணியாளர்கள் எவர் எடுத்து நடத்துவதாக அறிந்தாலும் சம்மந்தப்பட்ட இனத்திற்கான குத்தகை உரிமம் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
13. காரணம் எதுவும் கூறாமல் எந்த ஒரு கேள்வியையும் நிராகரிக்கவோ அல்லது ஏலம்/டெண்டர் ஒத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு உரிமை உண்டு. உயர்ந்த கேள்வி கேட்டால் கூட திருக்கோயில் நலன் கருதி ஏலத்தை ரத்து செய்ய செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
14. பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பாலிதீன் பைகள் தடை செய்யப்பட்டுள்ளதால், பேப்பர் பை, மூங்கில் தட்டு, பாக்கு மரத்தட்டு ஆகியவைகளை மட்டுமே உரிமைதாரர்கள் பயன்படுத்த வேண்டும்.
15. இதர நிபந்தனைகள் ஏதுமிருப்பின் அவை பொது ஏலம்/டெண்டர் விடும் நேரத்தில் தெரிவிக்கப்படும்.

16. <u>தேங்காய் பழக்கடைக் குத்தகை ஏல நிபந்தனைகள்–</u>

1. தேங்காய் பழக்கடையில் தேங்காய், வாழைப்பழம், விபூதி, குங்குமம், மஞ்சள் கிழங்கு, மஞ்சள் கயிறு, வெற்றிலை பாக்கு போன்ற அர்ச்சனைப் பொருட்கள் மட்டும் விற்பனை செய்ய வேண்டும். இதர பொருட்கள் ஏதும் விற்பனை செய்யக் கூடாது. குறிப்பாக தகடுகள் ஏதும் விற்பனை செய்யக் கூடாது.
2. தரமான பன்னீர் பாட்டில்கள் மற்றும் வாசனை மிகுந்த சாம்பிராணி விற்பனை செய்யப்பட வேண்டும்.
3. தேங்காய், பழம் விற்பனையில் திருக்கோயிலுக்கு வரும் சேவார்த்திகளுக்கு எவ்விதத்திலும் இடையூறு இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும்.
4. திருக்கோயில் ஒதுக்கீடு செய்யப்படும் இடத்தில்தான் கடை நடத்த வேண்டும்.
5. சேவார்த்திகளை கவரும் வண்ணம் கடையின் பெயர் பலகை, விலைப்பட்டியல் வைத்தும் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் நடத்திட வேண்டும்.

17. <u>தினசரி பூக்கடை வைத்துக் கொள்ளும் உரிமம் ஏல நிபந்தனைகள்–</u>

1. வாசனை மலர்களை கொண்ட மாலைகள் மற்றும் கதம்பம் மட்டும் விற்பனை செய்யப்பட வேண்டும்.
2. தரமான எலுமிச்சம் பழம், மாலை மற்றும் வாசனை மிகுந்த சந்தனம் ஆகியவை விற்பனை செய்யப்பட வேண்டும்.

18. <u>பிரசாதங்கள் தயாரித்து விற்பனை செய்தல் நிபந்தனைகள்–</u>

1. பிரசாதங்கள் சுத்தமான கலப்படமில்லாத தரமான பொருட்களைக் கொண்டு தயாரிக்க வேண்டும். தினசரி தயாரிக்கும் பிரசாதங்களை பாதுகாப்பான முறையில் சுகாதார முறைப்படி பொட்டலமாகவோ அல்லது கவர்களில் வைத்தோ விற்பனை செய்ய வேண்டும்.
2. பிரசாதம் தயாரிப்பவர் மற்றும் விற்பனை செய்யும் பணியாளர்கள் இந்து மதத்தை சேர்ந்தவராகவும், ஆராக்கியமானவராகவும், சுத்தமானவராகவும் இருக்க வேண்டும்.
3. தினசரி தயாரிக்கப்டும் பிரசாதங்கள் குறித்து அறிவிப்பும் பட்டியலும், விலைப்பட்டியலும் எல்லோர் பார்வைக்கும் தெரியும் இடத்தில் வைத்திருக்க வேண்டும்.
4. பிரசாதங்கள் தயாரிக்கப்படுவதையும், விற்பனை செய்யப்படுவதையும் கண்காணிக்க ஆலய நிர்வாகத்தினருக்கு அதிகாரம் உண்டு. பொது மக்களிடம் இருந்து புகார் ஏதும் ஏற்படா வண்ணம் எல்லா ஏற்பாடுகளையும் ஏலம் எடுப்பவர் செய்து கொடுக்க வேண்டும்.
5. பிரசாதம் தயார் செய்ய பித்தளை பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டால் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது ஈயம் பூசி நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

6. பிரசாதம் தயாரிப்பவர் (ஏலம் எடுத்தவர்) தான் சொந்த பொறுப்பில் பிரசாதங்கள் தயாரிக்க கூடிய சாமான்களையும், பாத்திரங்களையும் தங்களது பாதுகாப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். இதில் ஏற்படும் குறைபாடுகளுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.
7. ஏலதாரர் அறிவிப்பில் கண்ட பிரசாதங்களை தவிர வேறு பிரசாதங்களை தயாரித்து விற்பனை செய்ய வேண்டுமானால் எழுத்து மூலம் அலுவலகத்திற்கு மனு செய்து செயல் அலுவலர் அனுமதி பெற்றபின் ஏற்பாடு செய்ய வேண்டும்.
8. பிரசாதம் தயாரித்து விற்பவர்கள் ஆலய நிர்வாகம் குறிப்பிடும் இடத்தில், தயாரித்து குறிப்பிடும் இடத்தில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். திருக்கோயிலின் உட்பகுதியில் விற்பனை செய்ய கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது.
9. ஆலய உபயதாரர்களுக்காக மடப்பள்ளியில் தயாரிக்கப்டும் பூஜைப் பிரசாதங்களுக்கு ஏலதாரர் உரிமை ஏதும் கேட்கவோ ஆட்சேபனை செய்யவோ அனுமதிக்கப்படமாட்டாது.
10. தினசரி தயாரிக்கப்படும் பதார்த்தங்களில் ஒரு செட் எல்லா வகையான பிரசாதங்களையும் ஆலய அலுவலகத்திற்கு சோதனைக்காக இலவசமாக கொடுப்பட வேண்டும்.
11. பிரசாதங்கள் குறிப்பிட்ட எடை அளவுகள் குறைவானதாகவும், தரம் குறைவானதாகவும் இருந்தால் விற்பனையை உடன் நிறுத்துவதுடன் ஏல உரிமம் ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
12. பிரசாதங்கள் விற்பனை செய்யும் போது கீழ்க்கண்ட எடை மற்றும் விலை விபரப்படி இருக்க வேண்டும்.

| வ.எண் | உரிமம் | | எடை<br>கி.கிராம் | விற்பனை விலை<br>ரூ பை |
|---|---|---|---|---|
| 1 | லட்டு | 1 – க்கு | 0.050 | 10.00 |
| 2 | முருக்கு | 1 – க்கு | 0.050 | 10.00 |
| 3 | அப்பம் | 1 – க்கு | 0.050 | 10.00 |
| 4 | பேரீச்சம் பழம் | 1 – க்கு | 0.100 | 10.00 |
| 5 | கல்கண்டு பாக்கெட் | 1 – க்கு | 0.050 | 7.50 |
| 6 | சர்க்கரை பொங்கல் | 1 பாக்கெட் | 0.100 | 10.00 |
| 7 | புளியோதரை | 1 பாக்கெட் | 0.100 | 10.00 |
| 8 | மிளகு தட்டை | 1 – க்கு | 0.050 | 10.00 |

13. மடப்பள்ளியில் தயார் செய்யப்படும் பிரசாதங்களுக்கு மறுப்பு தெரிவிக்க ஏலதாரருக்கு உரிமை இல்லை. அதே போன்று தேநீர் கடையில் பொங்கல், புளியோதரை, எலுமிச்சம்பழம் சாதம், போன்ற உணவு வகைகள் விற்பனை செய்வதற்கு ஆட்சேபனை செய்ய இந்த உரிமைதாரருக்கு உரிமை இல்லை.

**19. <u>தேநீர் கடை வைத்துக் கொள்ளும் உரிமம் ஏல விற்பனைகள்–</u>**

1. சுத்தமான எண்ணெய் மற்றும் தரமான பொருட்களால் தயார் செய்யப்படும் உணவுப் பொருட்களையே விற்பனை செய்ய வேண்டும்.
2. பலகாரங்கள் தயாரிப்பில் பொதுநலக்கேடு ஏற்பட்டு அதனால் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் பாதிக்கப்பட்டால் அதற்கு ஏலதாரரே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.
3. சுத்தமான, சுகாதாரமான குடிநீர் வழங்கப்பட வேண்டும்.
4. திருவிழா காலத்தில் தற்காலிக கடைகள் நடத்திட ஆலய நிர்வாகத்திற்கு உரிமை உண்டு. இதனை மேற்படி ஏல உரிமதாரர் ஆட்சேபிக்கக் கூடாது. தேவையெனில் மேற்படி உரிமைதாரரும் தனி அனுமதி பெற்று தற்காலிகக் கடை வைத்துக் கொள்ளலாம்.
5. பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளதால் அதனைப் பயன்படுத்தக் கூடாது.
6. மின்கட்டணத்தினை ஏல உரிமைதாரரே செலுத்த வேண்டும்.
7. கடையின் பெயர் பலகை, பொருட்களின் விலைப்பட்டியல் ஆகியன வைத்தும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் கடையினை வைத்துக் கொள்ள வேண்டும்.
8. கீழ்காணும் உணவுப் பொருட்களை விற்பனை செய்யலாம்.
   காபி, டீ, இட்லி, வடை வகைகள், தோசை, சப்பாத்தி, பூரி, பொங்கல், பன் வகைகள், பிரட், பிஸ்கட், காரவகைகள், (முருக்கு, மிக்சர், காரச்சேவு, காராபூந்தி போன்றவைகள்) எலுமிச்சம் சாதம், புளியோதரை, தயிர்சாதம் போன்ற சித்ராண்ணம் வகைகள், சாப்பாடு.

**20. <u>இளநீர் குளிர்பானம் மற்றும் பெட்டிக்கடை ஏல நிபந்தனைகள் –</u>**

1. குளிர்பானங்கள் மற்றும் பெட்டிக் கடைகளுக்குரிய பொருட்களை மட்டும் விற்பனை செய்ய வேண்டும்.
2. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலன் கருதி பெட்டிக்கடையை தினசரி திறந்து வைத்திருக்க வேண்டும்.
3. இளநீர், சர்பத், குளிர்பானங்கள், ஐஸ் மற்றும் ஐஸ் கிரீம் வகைகள், வெற்றிலை பாக்கு, பிஸ்கட் வகைகள், மிட்டாய் வகைகள், பழவகைகள் ஆகியன ஒதுக்கீடு செய்துள்ள கடையில் வைத்து மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். வாகனங்கள் மற்றும் வண்டிகளில் வைத்து திருக்கோயில் வளாகத்தில் திறந்த இடங்களிலெல்லாம் நிறுத்தி விற்பனை செய்யக் கூடாது. கடையின் பெயர் பலகை, உரிமைதாரர் பெயருடன் வைக்க வேண்டும்.
4. மேற்கண்ட பொருட்கள் தவிர சாமி படங்கள், கேசட், சி.டி, டி.வி.டி மற்றும் புகையிலைப் பொருட்கள் ஏதும் விற்பனை செய்யக் கூடாது. நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் முன்னறிவிப்பு ஏதுமின்றி ஏல உரிமம் ரத்து செய்யப்படும்.

**21. <u>காணிக்கை கோழி மற்றும் சேவல் சேகர உரிமம் ஏல நிபந்தனைகள்–</u>**

1. ஏலதாரர்கள் திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெறும் கோழி மற்றும் சேவல் போன்றவைகளை மட்டும் உடனுக்குடன் தன் சொந்தப் பொறுப்பில் சேகரித்துக் கொள்ள வேண்டும்.
2. திருக்கோயிலில் அசுத்தம் ஏற்படாமலிருக்க நிர்வாகத்தினர் குறிப்பிடும் இடத்தில் தனிக் கூண்டு, தன் சொந்தப் பொறுப்பில் அமைத்து குத்தகை இனங்களை சேகரித்துக் கொள்ள வேண்டும். அசுத்தம் ஏற்பட்டால் தன் சொந்தப் பொறுப்பில் சுத்தம் செய்து கொடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் திருக்கோயிலின் உட்பகுதியில் கோழி மற்றும் சேவல் கேசரத்திற்கென கூண்டு அமைக்க கூடாது.

**22. <u>காணிக்கை ஆடு சேகர உரிமம் –</u>**

1. திருக்கோயிலுக்கு பக்தர்களால் காணிக்கையாகச் செலுத்தப்படும் ஆடுகளை உரிமதாரர் உடனுக்குடன் சேகரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.
2. திருக்கோயில் வளாகத்தினுள் கண்ட இடங்களில் கட்டிப் போடக் கூடாது. திருக்கோயில் வெளிப்பகுதியிலேயே சேகரம் செய்ய வேண்டும்.

**23. <u>வாகனக் கட்டணம் வசூல் உரிமம் –</u>**

| வ.எண் | வாகனங்கள் விபரம் | கட்டணம் விபரம் ரூ பை |
|---|---|---|
| 1 | பேருந்துகள், லாரி வகை | 100.00 |
| 2 | வேன், மினி பஸ் வகை | 50.00 |
| 3 | அம்பாஸிடர், சுமோ, குவாலிஸ் வகை | 50.00 |
| 4 | ஆட்டோ மூன்று சக்கர வாகனங்கள் | 10.00 |
| 5 | இரண்டு சக்கர வாகனங்கள் | 5.00 |

1. இவ்வுரிமம் ஏலம் எடுத்தவர்கள் நாள் 1க்கு சுமார் 12.00 மணி நேரம் வீதம் இந்தக் கட்டணம் நிர்ணய அடிப்படையில்தான் வாகனக் கட்டணங்கள் வசூல் செய்ய வேண்டும்.
2. திருக்கோயில் விளம்பர பலகையில் கண்டுள்ளபடியே வாகனக் கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டும். இதில் கண்டுள்ள கட்டணத்திற்கு கூடுதலாக வசூல் செய்யப்படுவதாக புகார்கள் வரப்பெற்றால் வசூல் உரிமம் இரத்து செய்யப்படும் மறு ஏலம் வைக்கப்படும். மறு ஏலத்தில் நஷ்டம் ஏற்பட்டால் முன் ஏலதாரரிடமிருந்து நஷ்டத் தொகை வசூல் செய்யப்படும். லாபம் ஏற்பட்டால் எவ்வித தொடர்ச்சியும் இல்லை.

3. உரிமதாரர் தனது சொந்தச் செலவில் கட்டணச்சீட்டு அச்சடித்து திருக்கோயில் அலுவலக முத்திரை பெற்ற பின்னர் தான் பயன்படுத்த வேண்டும். திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக முத்திரை பெற்ற பின்னர் தான் பயன்படுத்த வேண்டும் திருக்கோயில் அலுவலக முத்திரை இல்லாத சீட்டுகள் விற்பனை செய்தாலோ, நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தைவிடக் கூடுதலாக வசூல் செய்தாலோ மேற்படி உரிமம் ரத்து செய்யப்படும்.
4. அரசு வாகனங்கள் மற்றும் திருக்கோயில் நிர்வாகம் சார்ந்த வாகனங்கள் எவற்றிற்கும் வாகனங்கள் பாதுகாப்பு கட்டணம் வசூல் செய்யக் கூடாது.
5. இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கு திருக்கோயிலின் முன்பாக சாலையின் ஓரமாக உள்ள நாவல் மரங்கள் இருக்கும் பகுதியையும், நான்கு சக்கரம் மற்றும் இதர வாகனங்கள் நிறுத்துவதற்கு கலை அரங்கம் முன்பாக உள்ள திறந்த வெளிப் பகுதியையும் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
6. கட்டணச்சீட்டு விபரம் மற்றும் நிறுத்துமிடம் குறித்த விபரங்களை பேனர் மற்றும் அறிவிப்புப் பலகைகளில் எழுதி, வாகனங்கள் நிறுத்தும் பகுதிகளில், பயனாளிகள் அறியும் வண்ணம் உரிமதாரர் தனது சொந்தச் செலவில் திருக்கோயில் வளாகத்தில் இரண்டு இடங்களில் வைத்திடல் வேண்டும்.
7. அலுவலகப் பணியாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் வாகனங்களைத் தவிர பிற வாகனங்களை திருக்கோயில் மதில் சுவரை ஒட்டியுள்ள பகுதிகளில் நிறுத்த அனுமதிக்கக் கூடாது.
24. உரிமம் சம்மந்தப்பட்ட வகையில் விற்பனை வரி, ஊராட்சி வரி மற்றும் வருமான வரி ஏதேனும் செலுத்த நேர்ந்தால் அதை சம்மந்தப்பட்ட உரிமதாரரே தமது சொந்தப் பொறுப்பில் செலுத்திக் கொள்ள வேண்டும்.
25. திருக்கோயிலின் நன்மையைக் கருத்திற் கொண்டு உரிமதாரர்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் உத்திரவுகள் பிறப்பிக்கவும், புகார்கள் ஏதும் பெறப்பட்டால் அதை விசாரித்து நடவடிக்கை எடுக்கவும் கோயில் செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.
26. உரிமம் தொகைகளில் எக்காரணத்தைக் கொண்டும் தள்ளுபடி எதுவும் அளிக்கப்படமாட்டாது. உரிமதாரருக்கு ராஜீகத்தாலும், தெய்வீகத்தாலும் ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதில் கோயிலுக்கு எவ்வித பொறுப்பும் இல்லை. எந்த ஒரு இனத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உள் குத்தகைக்கு விடக்கூடாது.
27. உரிம காலம் முடிந்த பின் சம்மந்தப்பட்ட உரிமத்தின் உரிமதாரருக்கு பின் தொடச்சியோ அல்லது உரிமையோ கிடையாது.
28. ஏலம்/ டெண்டர் இறுதி முடிவு தெரிந்த அல்லது செயல் அலுவலரின் அறிவிப்பு கிடைத்த 7 நாட்களுக்குள் உரிமதாரர் சம்மந்தப்பட்ட இனத்திற்கு தன் சொந்தப் பொறுப்பில் சட்ட விதிகளின் படி ஒப்பந்தப்பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

29. மேற்கண்ட பலவகை இனங்களுக்குரிய நிபந்தனைகள் ஏதேனும் மீறும் பட்சத்தில் ஏலம் / டெண்டர் எடுத்தவரின் உரிமம் முன்னறிவிப்புன்றி ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் / டெண்டர் நடத்தப்படும். மறு ஏலம் / டெண்டர் நடத்துவதால் திருக்கோயிலுக்கு ஏதேனும் இழப்பு ஏற்படின் அதற்கு முன் ஏலதாரரே பொறுப்பாவார். திருக்கோயிலுக்கு லாபம் ஏற்படின் அதில் பங்கு கேட்க ஏலதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

30. தேவை எனில் கூடுதல் நிபந்தனைகள் விதிக்க திருக்கோயில் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

இரா.ஞானசேகரன்,எம்,எஸ்சி.,பி,எல்.,
உதவி ஆணையர்/தக்கார்.

ர,கணபதிமுருகன், எம்,ஏ.,பி,எல்.,
செயல் அலுவலர்(கூ.பொ)